පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය : 79
ආයතනයේ නම : කම්කරු දෙපාර්තමේන්තුව
පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 79
நிறுவனத்தின் பெயர் : தொழில் திணைக்களம்
பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முவைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் நிறுவனங்களிறகுப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்.

Parliamentary Series No: 79
Name of the institution: Labour Department
Submission of observation of the Hon. Minister in charge of the institutions and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of standing Order No. 119(4)

பாராளுமன்றப் பிரசுரிப்பு தொடர்கள் இல : பாராளுமன்றப் பிரசுரிப்பு தொடர்கள் இல. 79

நிறுவனத்தின் பெயர் - தொழில் திணைக்களம்

குழுவினால் அடையாளங்காணப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளைச் சீர்படுத்துவதற்கு நிறுவனத்தினால் மேற் கொள்ளப்பட்டட நடவடிக்கை/ தற்போதய நிலமை
முதல் பகுதி : 91.00	
இடர் நேர்வுப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை	முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வுத் திணைக்களத்தின் DMA/01- 2019(I) இலக்க சுற்று நிருபம் மற்றும் DMA/AMC/02/2021/02 இலக்கத்தையடையதும் 2021.04.05 ஆந் திகதிய கடிதம் என்பவற்றின் ஏற்பாடுகளின் நியதிகளின் படி 2022 ஆம் ஆண்டிலிருந்து இடர்நேர்வுப் பதிவேடானது தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதுடன் காலத்திற்கேற்ப மாற்றங்களின் பிரகாரம் இடர் பதிவேட்டினைப் பராமரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும், DMA/1-2024 இலக்கத்தையும், 2024.06.21 ஆந் திகதி வழங்கப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்று நிருபத்தின் 6 ஆம் பந்தியில் பிரகாரம் ஒவ்வொரு நிறுவனமும் இடர்நேர்வுப் முகாமைத்துவ சட்டகவேலையை 2025 இலிருந்து ஆரம்பிக்க வேண்டும் என்பதுடன் அபாயங்களை அடையாளம் காண்பதற்கு உள்ளக நிர்வாக நடைமுறைகளை மேம்படுத்தவும் வேண்டும். ஒரு குழு ஒன்றினை நியமிப்பதுடன் அவசியமான படிகள் எதிர்காலத்தில் பின்பற்றப்படல் வேண்டும்.
அனைத்து வாகனங்களுக்கும் அரச இலச்சினையை வர்ணம் தீட்டப்பட்டிருக்கவில்லை.	அரச இலச்சினையைப் பெற்றுக்கொள்வதற்கு மற்றும் அரச திணைக்களத் தொழிற்சாலையிடமிருந்து வாகனங்களில் திணைக்களப் பெயரினை வர்ணம் தீட்டவும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதுடன் நாளாந்தம் ஆகக் குறைந்தது 08 வாகனங்களையாவது அதற்கு அனுப்புமாறு திணைக்களம் அறிவித்துள்ளது. திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்கள் தீவு பூராவும் உள்ள பிரதேச அலுவலகங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன என்பதுடன் தலைமை அலுவலகத்தில் இருக்கும் வாகனங்கள் அவசியமான கடமைகள் மற்றும் நீதிமன்றக் கடமைகள் போன்றவற்றில் ஈடுபடுத்தப்பட உள்ளன. ஆகக் குறைந்து 08 வாகனங்களை அரச தொழிற்சாலைத் திணைக்களத்திற்கு அனுப்புவதென்பது நடைமுறையில் கடினமானதாகும் ஆதலால் வர்ணம் தீட்டுதல் முடிக்கப்படவில்லை. எவ்வாறெனினும், அரச இலச்சினையை வர்ணம் தீட்டுவதற்கும் அதேபோல் திணைக்களப் பெயரினை அனைத்து வாகனங்களக்கும் பொறிப்பதனையும் 2024.09.30 ஆந் திகதியில் செய்து முடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
நி. ஒ. விதி. 94 (1) இன்படி செலவினக் குறியீட்டிற்கான ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர், ஆண்டின் இறுதியில் எஞ்சியிருந்த	2022 ஆம் ஆண்டின் இறுதியில், மீண்டுவரும் செலவினத் குறியீட்டில் 221-1-1-1202, 221-2-4-1-1302 மற்றும் 222-2-2-1402 என்னும் பெயர்களையுடைய எஞ்சியிருந்த 03 ஏற்பாடுகள் மட்டும் வரம்புகளை மீறி வரவு வைக்கப்பட்டுள்ளன. பின்வரும் காரணங்கள் அதனைப் பாதித்துள்ளன. தொழில் திணைக்களமானது 101 பிரிவுகளைக் கொண்டுள்ளது. இத்தகைய

<table>
<tr>
<td>ஒதுக்கீடுகள் வரம்புகளை மீறி வரவு வைக்கப்பட்டுள்ளன.</td>
<td>அனைத்துப் பிரிவுகளினதும் வரவுகளினை அடையாளங் காண்தல் மற்றும் அறிக்கையிடுதலில் பல நடைமுறைப் கஸ்டங்கள் எழுந்துள்ளன. அறிக்கையிடப்பட்ட வரவுகள் மற்றும் கொடுப்பனவு வரவுகளுக்குமிடையிலான வித்தியாசத்திற்கான காரணங்கள் அறிக்கையிடும் நபர்கள் அவற்றினை துல்லியமாக அடையாளம் காணவில்லை, அறிக்கையிடவில்லை, சரியான பெறுமதியை அறிந்து கொள்ளாது அறிக்கையிடல், அறிக்கையிடப்பட்டதன் பின்னர் கொடுப்பளவு செய்யாமை போன்றன ஆகும். துல்லியமான வரவுகளை சரியான மு றையில் அடையாளங்கண்டு அறிக்கையிடுமாறு அனைத்துத் தரப்பினர்களுக்கும் அறிவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. வரவுகள் சரியாக அறிக்கையிடப்படும். மேலும், 2023 ஆம் ஆண்டின் வரவுகள் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் மேலதிக செலவு உருவாக்கப்படவில்லை என்பதுடன் இது கணக்காய்வுக் கண்காணிப்பாளரின் 2024.07.09 திகதியுடைய மற்றும் LSW/B/LD/02/2022/AQ10 இலக்கம் கணக்காய்வு அறிக்கையின் கணக்காய்வாளர் அதிபதியின் சாராம்சத்தின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.</td>
</tr>
<tr>
<td>ஒரு வருடத்திற்கும் மேலாக சேகரிக்கப்படாது உள்ள கடன் நிலுவைகள்.</td>
<td>1. 2021 திசெம்பர் இல் தங்களது பதவியை விட்டு விலகியவர்கள், பதவியிலிருந்து விலக்கப்பட்டவர்கள் அல்லது ஓய்வுபெற்றுச் சென்ற அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைகள்.
• 2-4 வருடங்கள் ரூபா. - 781,108.00
• 5 வருடங'களுக்கும்மேலாக - ரூபா.- 1,186,675.00
• மொத்தம்.ரூபா. - 1,967,784.16
<table>
<tr><th>கடன் நிலுவைகளைமீள அறவிட எடுக்கப்பட்ட நடவடிக்ைக</th><th>அலுவலர்களின் எண்ணிக்கை</th><th>2021.12.21 ஆந்திகதியில்நிலுவை</th><th>2024.0729 ஆந் திகதியில் மீளஅறவிட்பட்டது அல்லது தள்ளுபடி செய்யப்பட்டது.</th><th>உரிய நிலுவை</th></tr>
<tr><td>அமைச்சின் செயலாளரின் அனுமதியின்கீழ் நிலுவையை துண்டிக்கப்பட்டது.</td><td>14</td><td>196,494.25</td><td>196,494.25</td><td>-</td></tr>
<tr><td>வழக்குத் தொடுப்பிற்காக அனுப்பப்பட்டுள்ளது</td><td>8</td><td>722,539.96</td><td>38,840.21</td><td>683,699.75</td></tr>
<tr><td>தவணைமுறைகளிலான கொடுப்பனவு</td><td>5</td><td>349,905.00</td><td>116,133.00</td><td>233,772.00</td></tr>
<tr><td>பிணையாளர்களிடமிருந்து அறவிடப்பட்டது</td><td>1</td><td>99,470.45</td><td>58,130.58</td><td>41,339.87</td></tr>
<tr><td>கொடுப்பனவு முடிக்கப்பட்டது.</td><td>1</td><td>52,248.00</td><td>52,248.00</td><td>-</td></tr>
<tr><td>இறந்தவர்கள,கடிதங்களுக்கு பதில் இல்லை,முகவரிகள் உறுதிப்படுத்தப்படவில்லை2024.</td><td>13</td><td>547,126.50</td><td></td><td>547,126.50</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>42</td><td>1,967,784.16</td><td>461,864.04</td><td>1,505,938.18</td></tr>
</table>
2. ரூபா. 461,864.04 தொகை மொத்தக்கடன் தொகை அறவிடப்படல் வேண்டும், அதில் ரூபா. 1,967,784.16 தொகை அறவிடப்பட்டுள்ளது. மீதமாக உள்ள சேகரிக்கப்படாத கடன் தொகையினை அறவிடுவதற்கு,
* ரூபா. 683,699.75 தொகை பெறுமதியான 8 சேகரிக்கப்படாத கடன் நிலுவைகள் வழக்குத் தொடுப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளது.</td>
</tr>
</table>

	* ரூபா. 233,772.00 தொகை பெறுமதியான 5 கடன் நிலுவைகள் தவணை முறையில் அலுவலர்களினால் கொடுப்பனவு செய்யப்படுகின்றது. * ரூபா. 41,339.87 தொகை பெறுமதியான கடன் நிலுவை பிணையாளர்களிடமிருந்து அறவிடப்பட்டு வருகின்றது. * ரூபா. 547,126.50 தொகை பெறுமதியான13 கடன் நிலுவையை அறவிடுவதற்கு உரிய அலுவலர்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. 2024.05.29 ஆந் திகதிய மற்றும் 01/2024(4) - இடைக்கால ஏற்பாடுகள் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை இன் கீழ் நீண்டகாலம் சேகரிக்கப்படாத ரூபா. 100,000 வரையான கடன் தொகையை தள்ளுபடி செய்வதற்கு பிரதான கணக்காளர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. என வே அறவிடப்பட முடியாத கடன் நிலு வைகள் 2024.12.31 ஆந் திகதிக்கு முன்னர் தள்ளுபடி செய்யப்படும். இதன் பிரகாரம், ரூபா. 4,57,854.90 மொத்தக்கடன் தொகையின் ரூபா. 1,967,784.16 தொகை ஆனது 01/2024(4) இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் கீழ் தள்ளுபடி செய்வதற்கென அடையாளங் காணப்பட்டுள்ளது.
பொது வைப்புக் கணக்கில் தவணை கடந்த வைப்புகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	இரண்டு வருடங்களுக்கும் மேலான தவணைகடந்த வைப்புகள் தொடர்பில் நி.ஒ. 571 இன் நியதிகளின்படி செயற்படுவதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன. ஊழியர் சேமலாபநிதி வைப்புக்கள் அதே போல்வழக்குத் தொடுப்பதன் ஊடாகச் சேகரிக்கப்பட்டவை இத்தொகைக்குள் உள்ளடக்கப்படும். மொத்தத் தொகையும் சேகரிக்கப்படும் வரை கொடுப்பனவினை மேற்கொள்ள முடியாமை, அங்கத்தவர்கள் புலம் பெயர்ந்திருத்தல், மற்றும் உரிமைக்காரர்கள் தாமாகவே வரும் வரைக்கும் காத்திருத்தல் போன்ற காரணங்களினால் கொடுப்பனவுகள் தாமதமாக்கப்பட்டுள்ளன. எவ்வாறெனினும், இத்தாமதத்தின் காரணமாக பணமானது அரச வருவாய்க்கு வரவு வைக்கப்பட்டு பின்னர் பல சந்தர்ப்பங்களில் மீள எடுக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளன. திரும்ப இப்பணத்தினைப் பெறுவதற்குக் காலதாமதம் எற்படுவதினால் பணத்தின் உரிமையாளர்கள் பலசிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர். எனவே, இப்பணத்தினை அரச வருமானத்திற்கு வைப்பிடுதல் காலதாமதமாகின்றது. தற்பொழுது, அனைத்துப் பிரிவுகள் மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்கும் விசாரணைகளை மேற்கொள்வதற்கும் காலதாமதமான வைப்புக்களை 05 மாதகாலத்திற்குள் கொடுத்துத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. கொழும்பு பிரதேசத்தில் நீதவான் நீதிமன்றத்தினால் மீளஅறவிடலினால் பொதுவைப்புக் கணக்கினால் பெற்றுக் கொண்ட அறவீடுகள் இரண்டு வருடங்களுக்கும் மேலாக தவணை கடந்த வைப்புகளில் இருப்பவற்றைக் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்திற்காக நிரந்தர குழு ஒன்று ஊழியர் சேமலாப நிதியத்தினால் நியமிக்கப்படும். ஊழியர் சேமலாப நிதியத்தின் நிலுவைகளைக் கொடுத்துத் தீர்க்கும் பொருட்டு, கொழும்பு நீதவான் நீதிமன்றமானது மீள அறவிடும் பிரிவுடன் இணைந்து, தற்பொழுது ஊ. சே. நி. மீள அறவிடும் பிரிவுகளால் பெற்றுக் கொள்ளப்படும் காசோலைகளை எதிர்காலத்தில் உரியமாவட்ட அலுவலகங்களிடமிருந்து எடுத்துக் கொள்வதற்குத் தேவையான

	நடவடிக்கைகளை எடுக்கின்றது. இந்நடவடிக்கையானது எதிர்காலத்தில் பொதுவைப்புக் கணக்கின் நிலுவையினை அடையாளங்காண்பதனை பிரச்சினை இன்றி இலகுவாக்கும். சேவையை முடிவுறுத்தும் பிரிவிற்கு உரிய நிலுவைகளைக் கொடுத்துத் தீர்ப்பதில் (ஊ.சே.நி. அல்லாத, சம்பள நிலுவைகள், பணிக் கொடை, நட்டஈடு, படிகள், கடன் பரீட்சைக்கட்டணம் , போன்ற பிற) அப்பிரிவானது முகவரிகளைக் கண்டுபிடிக்க முடியாத ஊழியர்கள் தொடர்பாக பத்திரிகை அறிவித்தல் ஒன்றைப் பிரசுரிப்பதற்கு ஆயத்தமாக உள்ளது. அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் கூட தாமாகவே வராதுவிடின் உரிய நட்ட ஈடு அரச வருவாய்க்கு வரவு வைக்கப்டும். இதனை செயற்படுத்துவதற்கு கிட்டத்தட்ட நான்கு மாத காலங்கள் தேவைப்படும் என்பதனை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். திணைக்களத்தினால் அடையாளங்காண்படுகின்றது என்பதுடன் இதனை திருத்துவதற்காக 2024 இன் வருடாந்த செயல் திட்டத்தில் உள்ளடக்கப்படும்.
இரண்டாம் பகுதி : 82.00	
அனைத்து அலுவலர்களுக்குமான முன்னேற்ற ஒப்பந்தங்கள் தயாரிக்கப்படவில்லை.	2018.01.24 ஆந் திகதியதும் 02/2018 ஆம் இலக்க பொதுநிர்வாகச் சுற்றறிக்கை இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் அடிப்டையில் திணைக்களத்தின் அலுவலர்கள் தொடர்பாக வருடாந்த முன்னேற்ற ஒப்பந்தங்கள் இதுவரை தயாரிக்கப்பட்டு கையொப்பமிடப்படவில்லை. ஆரம்ப நடவடிகைகள் எடுக்கப்பட்டுள்ளன. திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் பிரிவுகள் அதே போல் நாடு பூராவும் உள்ள பிராந்திய அலுவலகங்களில் 2593 நபர்கள் 70 பதவிகளில் 2021.12.31 ஆந் திகதியில் ஈடுபட்டுள்ளனர். திணைக்களத்தின் வருடாந்த நடவடிக் கைத் திட்டத்தின் பிரகாரம் அனைத்து அலுவலர்கள் முன்னேற்ற ஒப்பந்தங்களை தயாரித்தல் சிக்கலான செயற்பாடாகும் என்பதுடன் அது 2022 ஆம் ஆண்டில் ஆய்வில் உள்ளது. எனவே, முன்னேற்ற ஒப்பந்தங்கள் தயாரிக்கப்படும் வரை, 07/98, 08/98(i) மற்றும் 08/ 98 (ii) இலக்கத்தையடையதும் 1998/03/13, 1998/04/30, மற்றும் 1998/12/11 திகதிகளையுமுடைய பொது நிர்வாகச் சுற்றறிக்கைகளினால் அறிமுகப்படுத்தப்பட்ட முன்னேற்ற மதிப்பீட்டு வடிவமைப்பின் அடிப்படையில் அனைத்து அலுவலர்களுக்கும் முன்னேற்ற மதிப்பீடுகள் செய்யப்பட்டு வருகின்றன. தொழில் திணைக்களத்தின் அலுவலர்களின் 2022 இற்கான முன்னேற்ற மதிப்பீடுகள் தொடர்ச்சியாகவும் விரிவாகவும் முடிவுறுத்தப்பட்டுள்ளன என்பதனை இத்தால் மேலும் குறிப்பிடுகின்றேன். மேலும், மேலதிகமாக " பொதுத் துறையில் உள்ள மனித வளங்கள் அபிவிருத்தி " என்பதுடன் தொடர்பாக பிரசுரிக்கப்பட்ட 02/2028 இலக்க சுற்று நிருபத்திற்கு மேலதிகமாகப் பிரசுரிக்கப்பட்ட 2023/11/30 ஆந் திகதியிடப்பட்ட 02/2018 (i) ஆம் இலக்க பொது நிர்வாக் சுற்ற்றிக்கையின் 3 ஆம் பந்திக்கு தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது. அந்தச் சுற்று நிருபத்தின் பிரகாரம், 02/2018 இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கயின் பந்தி (1) திருத்தப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதுடன் அதன் பின்னர் சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் முன்னேற்ற ஒப்பந்தங்கள் கைச்சாத்திடத் தேவையில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

	07/98, 08/98(i), மற்றும் 08/98 (ii) இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையினால் அறிமுகப்படுத்தப்பட்ட முன்னேற்ற வடிவமைப்புக்களை அனைத்து பதவிநிலை அலுவலர்கள் மற்றும் பதவிநிலை அல்லாத அலுவலர்கள் பொருட்டு முன்னேற்ற மதிப்பீடு செய்வதற்கு மேலும் பயன்படுத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்பதனை தயவுடன் குறிப்பிடுகின்றேன். இதன் பிரகாரம், 02/2018 (i) இலக்க பொது நிர்வாகச் சுற்றிக்கையின்படி முன்னேற்ற வடிவமைப்புக்களை பயன்படுத்தி திணைக்களத்தில் உள்ள அலுவலர்களின் முன்னேற்ற மதிப்பீட்டிற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதனைத் தயவுடன் குறிப்பிடுகின்றேன்.
திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளில் 50% குறைவாகவே நடாத்தப்பட்டுள்ளன.	சிரேஸ்ட மட்ட, மூன்றாம் நிலை மட்ட, இரண்டாம்நிலை மட்ட, மற்றும் முதல்நிலை மட்டத்தில் அனைத்து அலுவலர்களையும் மேவி ஒருவருடத்திற்கு 12 மணித்தியாலங்களுக்கும் குறையாத ஒரு காலப்பகுதிக்கான அடிப்படைப் பயிற்சித் திட்டம் (மனிதவள அபிவிருத்தித் திட்டம்) 2021 மற்றும் 2022 இற்காகத் தொழில் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டது. இதன் பிரகாரம், 2022 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தினால் திணைக்களத்தின் பயிற்சி நிகழ்ச்சிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளில் கவனம் செலுத்தி, மேலுள்ள அலுவலர்கள் வகைகளின் உரிய அலுவலர்களில் 70% ஆனவர்களை மேவக்கூடியதாகப் 2022 ஆண்டிற்காக பயிற்சி நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டு நடாத்தப்பட்டுள்ளன. எனவே, பயிற்சி சந்தர்ப்பங்கள் 50% கொடுக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டது போல் அல்லாது 2021 மற்றும் 2022 ஆகக் கொடுக்கப்பட்ட மனிதவள அபிவிருத்தி திட்டத்துடன் ஒப்பிடுகையில் 70% மட்டத்தில் பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது என்பதனை தயவுடன் குறிப்பிடுகின்றேன். மேலும், சிரேஸ்ட மட்ட, மூன்றாம் நிலை மட்ட, இரண்டாம்நிலை மட்ட, மற்றும் முதல்நிலை மட்டத்தில் அனைத்து அலுவலர்களையும் மேவக் கூடிய வகையில் வருடத்திற்கு 12 மணித்தியாலங்களுனக்கும் குறையாத அடிப்படைப் பயிற்சி உட்பட்ட பயிற்சிகளை வழங்குவதற்காக 2023 மற்றும் 2024 ஆண்டிற்காக மனிதவள அபிவிருத்தித் திட்டம் தொழில் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது. வருடாந்த வரவு செலவுத் திட்டத்தினால் 2023 மற்டறும் 2024 இற்காக திணைக்களத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகள் மீது கவனம் செலுத்தப்பட்டு வருடாந்த பயிற்சி திட்டங்கள் தனியாகத் தயாரிக்கப்பட்டு 50% இற்கும் மேலான பயிற்சி சந்தர்ப்பங்கள் உரிய அலுவலர்களுக்கு வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதனைத் தயவுடன் குறிப்பிடுகின்றேன். இதற்கும் மேலதிகமாக, காலத்திற்குக் காலம் இற்றைப்படுத்தப்படும் சுற்றுநிருபங்கள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக தொடர்ச்சியாக இப்பணிகளைச் செய்வதற்கு உரிய அலுவலர்களுக்கு பொறுப்புக்கள் வழங்கபப்பட்டுள்ளன என்பதனைத் குறிப்பிடுகின்றேன்.

நிறுவனத்தின் கணக்காய்வுக் கருத்து தகுதியுடையது/ மறுப்பு நிலையுடையது/ பிரதிகூலமானது.	இதுவரை திணைக்களமானது கணக்காவிற்கான தகுதியுடைய கருத்தினை பெற்றுள்ளது, அந்த கணக்காய்வு விடயங்கள் பாதித்துள்ள போதிலும் நிதியியல் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளன. கணக்காயுவு அவதானிப்புகளுக்கு இணங்க, தகுதிவாய்ந்த கருத்துக்களைப் பெறும் பொருட்டு கடந்த வருடங்களில் திருத்தங்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளன என்பதுடன் எதிர்கால நிதி கூற்றுக்களில் அவாவாறான நிலைமைகள் ஏற்படாது இருப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் உறுதியாக எடுக்கப்படும்.

ரணில் விக்ரமசிங்க
தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு